**தலைப்பு – 223 - இலங்கை கடற்படை**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்**

இலங்கை கடற்படையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுக்களையும் உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் படி, இலங்கை கடற்படையின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள், அவதானிப்புகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட விரிவான அறிக்கை 2019 மே 29 ஆம் திகதி கணக்களிப்பு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் படி, கடற்படைக்கு உரித்தான வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதி கணக்களிப்பு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் படி இவ் அறிக்கை பாராளுமன்றத்தில் சமப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான இலங்கை கடற்படையின் நிதி நிலைமைகள் மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது நோக்காகும்.

**1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்களிப்பு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளிற்கு இணங்க 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிட்டபட்ட ஏற்பாடுகளிற்கு இணங்க சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு கணக்களிப்பு உத்தியோகத்தரினது பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கடற்படையினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம், கடற்படையின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருவதாக கணக்களிப்பு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டியதுடன்

அம் முறைமையின் ஆக்கபூர்வத்தன்மை தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு இதன் படி, முறைமை ஆக்கபூவமான வகையில் மேற்கொள்ளப்படுவதற்கு அவசியமான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கடற்படையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஓட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள சமர்ப்பிக்கப்படுகையில் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான

குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக கணக்களிப்பு உத்தியோகத்தருக்கு தெரிவித்துள்ளளேன்.

## 1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் குறித்துரைக்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்கான தேவைப்பாடு இன்மையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டிற்கானவற்றுடன் இணங்கி உள்ளன எனக் குறிப்பிட முடியாதுள்ளது.

(ஆ) இலங்கை கடற்படையால் முன்னைய ஆண்டிற்கு உரித்தான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் தேவைப்பாடு இன்மையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் இவ் அறிக்கையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிதிசாராச் சொத்துக்கள் அறிக்கையிடப் படுகையில் அச் சொத்துக்களிற்கு உரித்தான பிரதான பேரேட்டு மீதியின் பெறுமதி ஒப்பிடப்பட வேண்டும். ஆவ்வாறல்லாதவிடத்து ஏதேனுமோர் மீதியாயின் அம் மீதி இனங்காணப்படும் வரையில் நாட்குறிப்பின் மூலம் அப் பெறுமதி பேரேட்டில் சீராக்கப்பட வேண்டிய மீதியாக வைத்திருக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால் நிதி நிலைமைக் கூற்றில் ஆதனம், இயந்திரம் மற்றும் உபகரணங்களின் பெறுமதியாகக் காண்பிக்கப் பட்டிருந்த ரூபா 36,872,707,423 தொகையான மீதி சரியானதல்ல என்பது அவதானிக்கப்பட்டது. | 2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல். | 2019 திசெம்பர் 31 ஆம் திகதி சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று வைப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) நிதி பிரமாணத்தின் 571(3) இன் பிரகாரம் வைப்புச் செய்யப்பட்ட திகதி முதல் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வைப்புக்கள் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டு அல்லது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் | நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 யூலை 08 ஆம் திகதி வரையில் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | 2018 திசெம்பர் 31 ஆம் திகதி நிலவிய ரூபா 13,262,391 தொகையான 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வைப்புக்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2015 யூன் 24 ஆம் திகதிய 243/2015 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 5.1 மற்றும் 5.3 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானத்திற்குச் செலவு வைக்கப்படாது ரூபா 6,702,483 தொகை பொது வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. | 2015 யூன் 24 ஆம் திகதிய 243/2015 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 5.1 மற்றும் 5.3 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 யூலை 08 ஆம் திகதி வரையில் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. |

### 1.6.3 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிசாராச் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் 2018 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறான மீதிக்கும் முன்யை ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கில் அசையாச் சொத்துக்களின் அசைவு குறித்த அறிக்கையின் 2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான மீதிக்கும் இடையே ரூபா 17,499 தொகையான வேறுபாடு நிலவியது. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் அதற்கு உரித்தாகப் பயன்படுத்திய பதிவேடுகளுடன் இணக்கம் செய்தல் வேண்டும். | 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | ஏசீஏ- 2(i) நிகழ்ச்சித்திட்டத்தின் படி, செலவினக் கூற்றில் மூலதனச் சொத்துக்கள் கையேற்பு ரூபா 7,478,715,659 தொகையான போதிலும் நிதிசாராச் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் சொத்துக்கள் கையெற்கப்பட்டமை தொடர்பாக எதுவும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் அதற்கு உரித்தாகப் பயன்படுத்திய பதிவேடுகளுடன் இணக்கம் செய்தல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது சீராக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| | மீளாய்வாண்டிற்கு உரித்தான நிதிசாரா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 36,872,707,423 தொகையான மீதி, நிலையான சொத்துப் பதிவேட்டில் காண்பிக்கப்பட்ட ரூபா 70,626,649,223 தொகையான மீதியுடன் இணங்கியிருக்கவில்லை. ஆகையால், | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் அதற்கு உரித்தாகப் பயன்படுத்திய பதிவேடுகளுடன் இணக்கம் செய்தல் வேண்டும். | 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட மீதியின் சரியான தன்மை குறித்து நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.6.4 முற்பணக் கணக்கு மீதி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | முற்பண "பீ" கணக்கிற்கு உரித்தான இணக்கற் கூற்றின் படி, 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு இலங்கை கடற்படையின் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 301,462,323 தொகையானதுடன் அன்றைய தினதில் தனியான மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை ரூபா 278,750,834 தொகையாகக் காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் அதற்கு உரித்தாகப் பயன்படுத்திய பதிவேடுகளுடன் இணக்கம் செய்தல் வேண்டும். | பல வருட காலமாக பேணப்பட்டு வரும் கட்டுப்பாட்டுக் கணக்கும் தனியான மீதிக்கும் இடையிலான வேறுபாடாகும். இவ் வேறுபாட்டை இனங்காண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் இவ்வாண்டுகளில் இவ் வேறுபாட்டிற்கு மேலதிகமாக அதிகரிப்பு நிகழவில்லை. |
| (ஆ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஊழியர் கடன் காலப்பகுப்பாய்வின் படி, கடந்படையில் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள் தவிர ஒரு வருடத்திற்கு மேலான காலமாக அறவிடப்படாது உள்ள கடன் மீதி ரூபா 23.46 தொகையானதுடன் இதில் ரூபா 22.18 மில்லியன் தொகை 05 ஆண்டுகளுக்கு மேலான காலமாக அறவிடப்படாது நிலவியது. இது அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடன் தொகையின் 76 சதவீதமென்பது அவதானிக்கப்பட்டது. | தாபன விதிக் கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 ஆம் 8.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஊழியர் கடன் அறவிடப்படுவதற்காக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 05 வருடங்களுக்கு மேலான காலமாக அறவிடப்படாது நிலவும் கடன் மீதியான ரூபா 22,187,681 தொகையில் நி.பி. 109 இன் கீழ் ரூபா 18,699,779 தொகை பதிவழிக்கப்படுவதற்காக அமைச்சிற்கும் பொதுத் திறைசேரிக்கும் சமர்க்கப்பட்டுள்ளது. ரூபா 576,480 தொகை சட்டரீதியாக அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகளுக்காக சட்டப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. எஞ்சிய மீதி இனங்காணப்பட்டு தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (இ) | 262/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் படி, 2018 ஆம் ஆண்டினதும் அதனை அடுத்த ஆண்டுகளில் ஓய்வுபெற்ற மற்றும் மரணப் பணிக்கொடை வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து | 262/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், நடவடிக்கை எடுத்தல். | 262/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், கடன் மீதிகள் தீர்க்கப்படாததுடன் இதுவரையில் ஓய்வூதியத் திணைக்களத்தினூடாக |

| | | |
|---|---|---|
| அறவிடப்பட வேண்டிய எந்தக் கடன்மீதியும் தமது நிறுவகங்களின் முற்பண ‘‘பீ’’ கணக்கில் உள்ளடக்கப்படலாகாத போதிலும், 2018 ஆம் ஆண்டிற்கான முற்பண ‘‘பீ’’ கணக்கில் 2018 ஆம் ஆண்டிற்காக மரணித்த மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 4,516,307 தொகையான கடன் மீதி காணப்பட்டது. | | காசோலைகள் உரிய நிறுவகத்திற்கு அனுப்பிவைக்கப்படுகின்றது. |

**1.6.5 கட்டுநிதி மீதி**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுத் தொகுதியின் ஏ.சீ.ஏ 3 இன் கீழ் 2018 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறான கட்டுநிதி மீதி ரூபா 27,134,100 தொகையான போதிலும் அம் மீதி கட்டுநிதிக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் அதற்கு உரித்தாகப் பயன்படுத்திய பதிவேடுகளுடன் இணக்கம் செய்தல் வேண்டும். | 2018 ஏப்ரல் 24 ஆம் திகதிய திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களத்தின் கடிதத்தின் படி, 2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு காணப்பட்டு கட்டுநிதி மீதியான ரூபா 27,134,100 தொகை 2018 ஆம் ஆண்டின் போது நாட்குறிப்புப் பதிவின் மூலம் கட்டுநிதி மீதி 2018 ஆம் ஆண்டிற்கு மாற்றப்பட்டிருந்தது. ஆகையால் 2017 ஆம் ஆண்டிற்கான இறுதி மீதி 2018 கட்டு நிதிக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தமையால் ஆரம்ப மீதி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. எதிர்வரும் காலங்களில் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

**1.6.6 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்பட்டிராமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம், பணம் இருப்பதையும், தினம்தோறும் பட்டியல்கள் கிடைக்கப்பெறுவதையும் அப் பட்டியல்கள் தாமதமின்றி தீர்க்கப்படுவதையும் உறுதிப்படுத்தப்படுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களாலும் | நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம், பொறுப்புகள் நாளாந்தம் பரீட்சிக்கப்படக் கூடிய வகையில் பொறுப்புப் பதிவேடொன்றில் அப் பொறுப்புகள் பதிவு செய்யப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை |

சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தர்களாலும் பொறுப்புப் பதிவேடு தினமும் பரிசீலிக்கப்பட வேண்டிய போதிலும் இலங்கை கடற்படையினால் பொறுப்புப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 1.6.7 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| பெறுமதி சேர் வரி கட்டுப்பாட்டுக் கணக்கில் செலுத்தப்பட வேண்டிய வரியாக ரூபா 19,473,838 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இதனை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான எழுத்து மூல ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவிற்கு உரித்தான எழுத்து மூல சான்றுகள் பெறப்பட்டு சரியான முறையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகையில் சுங்கத்தினால் அறவிடப்படும் பெறுமதி சேர் வரியாக தொடர்பான தகவல்கள் முறையான வகையில் கிடைக்கப்பெறாமையாலேயே பெறுமதி சேர் வரி கட்டுப்பாட்டுக் கணக்கில் செலுத்தப்பட வேண்டிய வரியாக ரூபா 19,473,838 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. இவ் வரித் தொகை செலுத்தப்பட்டதாகவும் இது வரையில் அத் தகவல்கள் சுங்கத்திடம் இருந்து பெறப்பட்டு சீராக்கப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| முறையாக விடயங்கள் ஆராயப்பட்டு பின்னர் தேவையான நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டு குறித்த காலப்பகுதியில் குறித்த செயற்பாட்டு இலக்கை எய்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததன் காரணமாக 18 மீண்டெழும் செலவின விடயங்களிற்கு உரித்தான ரூபா 131,448,677 தொகையான சேமிப்புகளும் | நிதிப் பிரமாணம் 150 குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியேற்படல். | வருட இறுதிக் கட்டுநிதிப் பணம் போதியளவில் பெறப்பட்டிராமையால் கொடுப்பனவு செய்ய முடியாதிருந்தது. |

05 மூலதனச் செலவின விடயங்களிற்கு உரித்தான ரூபா 44,812,047 தொகையான சேமிப்புகளும் காணப்பட்டதுடன் இவை மொத்த தேறிய ஏற்பாட்டின் 5 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சைக் கொண்டிருந்தன.

### 2.2 பொறுப்புகள் மற்றும் பிணைகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 கணக்காண்டின் போது பொருட்கள், சேவைகள் அல்லது நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்பாக உரிய சொத்துக்கள் மற்றும் சேவைகள் நிறுவகத்திற்குப் பெறப்படும் நோக்கில் வெளி நபர்களுடன் உடன்படிக்கைகள்/ கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 49,375,073 பெறுமதியான பூரணப்படுத்தப் பட்டிராத 84 உடன்படிக்கைகள்/ கட்டளைகள் காணப்பட்டன. இது தொடர்பான விபரம் பிணைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான கூற்றின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br><br>மேலும், பிணைகள் மற்றும் பொறுப்புகள் கூற்றின் கூட்டுத் தொகை ரூபா 3,151,988,065 தொகையான போதிலும் இது ரூபா 3,111,158,837 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 40,829,228 தொகையால் பொறுப்புகள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன. | நிதிக்கூற்றுக்களில் மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய பொறுப்புகள் தொடர்பான விபரம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். | கணனித் தவறினால் கூட்டுத்தொகை சரியாகக் கூட்டப்பட்டிருக்கவில்லை.<br><br>பிணைகள் மற்றும் பொறுப்புகள் கூற்றின் கூட்டுத்தொகை ரூபா 40,829,228 குறைவாகப் பதியப்பட்டிருந்தமை அமைச்சுக்கள்/ அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச்சட்ட சபைகளிற்காக உரிய பொறுப்புகள் மற்றும் பிணைகளின் இறுதிக் கூட்டுத்தொகை இன்மையாலாகும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 94(1)இன் பிரகாரம் வேறு விதத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர்ந்த வருடாந்த | நிறுவகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக நிதிப் பிரமாணம் 94(1)இன் பிரகாரம் வேறு விதத்தில் ஏற்பாடுகள் | கணனித் தவறினால் கூட்டுத்தொகை சரியாகக் கூட்டப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| மதிப்பீடுகளில் இதற்காக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருப்பின் திணைக்களத்தால் வேலை, சேவைகள் அல்லது வழங்கல் ஒன்றிற்காக பிணையொன்றிற்கு உட்பட வேண்டிய போதிலும் இதற்கு இணங்காதவகையில் இலங்கை கடற்படையால் அதன் எஞ்சிய ஏற்பாட்டிற்கும் மேலாக 11 செலவின விடயங்களிற்கு உரித்தாக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 1,800,148,557 தொகையான பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | மேற்கொள்ளப்பட்டிருந்தால் அன்றி எந்தவிதப் பொறுப்பிற்கும் உட்படாதிருத்தல் | |

## 2.3 முற்பண வழங்கலும் தீர்ப்பனவும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(5) இன் பிரகாரம், பணி நிறைவேற்றப்பட்டு 10 நாட்களுக்குள் பெறப்பட்ட குறித்த பணிக்கான கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 49 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 4,795,282 தொகையான குறித்த பணிக்கான கட்டுநிதி பணி நிறைவேற்றப்பட்டு 01 மாதம் முதல் 08 மாதங்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தன. | நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | பட்டியல்களில் காணப்பட்ட குறைபாடுகள் தீர்க்கப்படுகையில் தீர்ப்பனவுகள் தாமதமடைந்ததாகவும், கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் பல்வேறு வேறுபாடுகள் காரணமாக அவை சீராக்கப்பட்டு தீர்க்கப்படுகையில் தாமதம் ஏற்பட்டிருந்ததாகவும் அத் தாமதங்களைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

### 2.4 வங்கிக் கணக்குகள் பேணப்படல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| வழங்கப்பட்ட தினத்தில் இருந்து 06 மாதங்களிற்கு மேற்பட்ட எனினும் வங்கியில் சமர்ப்பிக்கப்பட்டிராத ரூபா 1,300,862 கூட்டுத்தொகையான 03 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | வழங்கப்பட்ட தினத்தில் இருந்து 06 மாதங்களிற்கு மேற்பட்ட எனினும் வங்கியில் சமர்ப்பிக்கப்பட்டிராத காசோலைகள் அனைத்திற்கும் இதுவரையில் நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கொள்வனவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அரசாங்கக் கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 5.3.11 (ஆ) பிரிவு மற்றும் 5.4.10 ஆம் பிரிவின் பிரகாரம் பொருட்கள் கொள்வனவு செய்யப்படுகையில் ஏலப் பிணை மற்றும் செயற்பாட்டுப் பிணை பெறப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,717,525 பெறுமதியான பட்டிகள் கொள்வனவு செய்யப்படுகையில் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கக் கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 5.3.11 (ஆ) பிரிவில் காண்பிக்கப்பட்டிருந்த விடயங்கள் சான்றுறுதிப்படுத்தப்படுவதற்காக ஏலவிற்பனைக்காக பிணையொன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் அரசாங்கக் கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 5.4.10 ஆம் பிரிவின் பிரகாரம் செயலாற்றல் தோல்வியுறும் வகையில் இதில் கொள்வனவின் நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக செயலாற்றல் பிணையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல். | ரூபா 5 மில்லியனிற்கு மேற்பட்ட கொள்வனவு களிற்காக மாத்திரம் ஏற்ற பெறுமதியில் ஏலப் பிணை மற்றும் செயலாற்றல் பிணை பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு 2015 யூலை மாதம் 08 ஆம் திகதிய நிறைவேற்றுக் குறிப்பின் மூலம் பணிப்பாளர் நாயகம் வழங்கல் மற்றும் சேவைகளால் ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்தமையால் உரிய கொள்வனவுகளின் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 5 மில்லியனிற்கு மேற்படாதமையால் ஏலப் பிணை மற்றும் செயலாற்றல் பிணை பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | அரசாங்கக் கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 8.9.1 (அ) ஆம் பிரிவின் பிரகாரம், ரூபா 250,000 இற்கு மேற்பட்ட வேலை ஒப்பந்தங்கள் தொடர்பாகவும் முறையான | அரசாங்கக் கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 8.9.1 (அ) மற்றும் (ஆ) பிரிவின் பிரகாரம், உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட வேண்டியமை. | கொள்வனவுகள் தொடர்பாக உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை எனவும் இதனை அடுத்து இத்தகைய தவறுதல்கள் ஏற்படாத வகையில் |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும், 19 சந்தர்ப்பங்களில் ரூபா 11,659,997 பெறுமதியான வேலைகளிற்காக ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. மேலும், அரசாங்கக் கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 8.9.1 (ஆ) பிரிவின் பிரகாரம் ரூபா 5 இலட்சத்திற்கு மேற்பட்ட கொருட்கள் கொள்வனவு செய்யப்படுவது தொடர்பாக முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 14 சந்தர்ப்பங்களில் ரூபா 20,985,359 பெறுமதியான இயந்திர மற்றும் படகுகளின் உதிரிப்பாகங்கள் போன்றவற்றின் கொள்வனவு தொடர்பாக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | | பொறுப்புடன் இருக்குமாறு கடற்படையினரை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 4.2.3 இன் பிரகாரம், ஒப்பந்தப் பெறுமதி ரூபா 25- 100 மில்லியனிற்கு இடைப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகள் விலைமனு பரீட்சிப்புக் கட்டத்தில் இருந்து ஒப்பந்தத்திற்கு கைச்சாத்திடப்படும் கட்டம் வரையான காலப்பகுதியான 15 கிழமைகளிற்குள் பூர்த்தியாக வேண்டிய போதிலும் இதற்காக 34 கிழமைகள் கடந்திருந்தன. | கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 4.2.3 இன் பிரகாரம், உரிய காலப்பகுதியின் படி, கொள்வனவு முழுமையாகச் மேற்கொள்ளப்படல். | கொள்வனவு நடவடிக்கைகள் விலைமனு பரீட்சிப்புக் கட்டத்தில் இருந்து கட்டளைகள் வழங்கப்படும் வரையில் குறித்த காலப்பகுதி தாமதமடையக்கூடும் எனவும் தேவையற்ற காலதாமதம் குறைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | அரசாங்க கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 4.2.3 இன் பிரகாரம், ஒப்பந்தப் பெறுமதி ரூபா 05- 25 மில்லியனிற்கு இடைப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகள் 12 கிழமைகளிற்குள் பூர்த்தியாக வேண்டிய போதிலும் இதற்காக 26 கிழமைகள் கடந்திருந்தன. | கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 4.2.3 இன் பிரகாரம், உரிய காலப்பகுதியின் படி, கொள்வனவு முழுமையாகச் மேற்கொள்ளப்படல். | கொள்வனவு நடவடிக்கைகள் விலைமனு பரீட்சிப்புக் கட்டத்தில் இருந்து கட்டளைகள் வழங்கப்படும் வரையில் குறித்த காலப்பகுதி தாமதமடையக்கூடும் எனவும் தேவையற்ற காலதாமதம் குறைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | அரசாங்க கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 4.2.3 இன் பிரகாரம், ரூபா 5 மில்லியனிற்கு குறைவான கொள்வனவு 10 | கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 4.2.3 இன் பிரகாரம், உரிய காலப்பகுதியின் படி, கொள்வனவு முழுமையாகச் மேற்கொள்ளப்படல். | கொள்வனவு நடவடிக்கைகள் விலைமனு பரீட்சிப்புக் கட்டத்தில் இருந்து கட்டளைகள் வழங்கப்படும் வரையில் குறித்த காலப்பகுதி |

| | | | |
|---|---|---|---|
| | கிழமைகளிற்குள் கட்டளைகளட வழங்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 5,716,175 பெறுமதியான தலைக்கவசங்கள் கொள்வனவின் போது 18 கிழமைகள் கடந்திருந்தன. | | தாமதமடையக்கூடும் எனவும் தேவையற்ற காலதாமதம் குறைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 1995 ஆம் 1996 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட எனினும் பயன்படுத்தப்படாத நிலைக்கு உட்பட்டிருந்த ரூபா 239 மில்லியன் பெறுமதியான 101 இயந்திரத் துப்பாக்கிகள் விளைவற்றுக் களஞ்சியத்தில் காணப்பட்டன. | 1997 செப்தெம்பர் 30 ஆம் திகதிய 353 ஆம் இலக்க, 2009 நவம்பர் 13 ஆம் திகதிய 438 ஆம் இலக்க மற்றும் 2003 சனவரி 03 ஆம் திகதிய 353(5) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரமும் நிதிப் பிரமாணம் 771 இன் பிரகாரமும் விளைவற்றும் குறைவான பயன்பாட்டுடனான சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படல். | கைதவிர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஆ) | திருத்த வேலைகளுக்காக வெளி நிறுவகம் ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்த 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 06 மாதங்கள் கடந்திருந்த போதிலும் ரூபா 1,110,200 பெறுமதியான 12 இயந்திர உபகரணங்கள் திருத்த வேலைகள் முடிவுற்று மீளப்பெறப்பட்டிருக்கவில்லை.<br>இதற்கு மேலதிகமாக திருத்த வேலைகளுக்காக கடற்படை வேலைத்தளத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த ஓபீஎம் இயந்திரம் மற்றும் ஏனைய 05 இயந்திரங்கள் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 06 மாதங்கள் முதல் 17 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களின் உச்சப் பயன்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்காக உடனடியாக திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட வேண்டும். | திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| | இலங்கை கடற்படைக்கு உரித்தான 12 மோட்டார் வாகனங்கள் திருத்தப்படுவதற்காக 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 07 மாதங்கள் முதல் 30 | மோட்டார் வாகனங்களில் இருந்து உச்சப் பயன்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்காக உடனடியாக திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு | திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| | மாதங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் திருத்த போதிலும் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பயன்பாட்டிற்கு எடுக்கப்பட வேண்டும். | |
| (ஈ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை கடற்படையிடம் காணப்பட்ட ரூபா 43,053,724 கிரயமான 03 படகுகள் 05 ஆண்டுகளுக்கு மேலான காலமாக கிழக்கு, மேற்கு மற்றும் வடக்கு கடற்படைத் தளங்களில் விளைவற்றுக் காணப்பட்ட போதிலும் திருத்தப்படுவதற்கோ அல்லது கைதவிர்க்கப்படுவதற்கோ தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1997 செப்தெம்பர் 30 ஆம் திகதிய 353 ஆம் இலக்க 2009 நவம்பர் 13 ஆம் திகதிய 438 ஆம் இலக்க மற்றும் 2003 சனவரி 03 ஆம் திகதிய 353(5) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரமும் நிதிப் பிரமாணம் 771 இன் பிரகாரமும் விளைவற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படல் | கைதவிர்க்கப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணைவைத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரைகள்** | **கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 880(ii) இன் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு பிணை வைக்கப்படுவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், 50 சந்தர்ப்பங்களின் போது ஒரு நாளைக்கு உத்தியோகத்தரின் பொறுப்பில் ரூபா 320,271 முதல் ரூபா 2,605,845 வரை பல்வேறு அளவுகளில் கையில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம், பிணை வைக்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 880(ii) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிணை வைப்பு நடவடிக்கைகள் கணக்குப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டிராததுடன் பணம் கைவசம் வைத்துக்கொள்ளப்பட்டிருந்த கடற்படை மற்றும் நிறுவக உத்தியோகத்தர்களிடம் இருந்து இது தொடர்பாக பதில்களைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்குப் பிரிவு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| கிழக்கு மாகாண கடற்படைப் பிரதேசத்தில் ரூபா 32,990,000 பெறுமதியான ஓர் படகு 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன. | படகுகளில் இருந்து ஆகக் கூடிய பயன்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்காக உடனடியாக திருத்தப்பட்டு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். | திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. |

### 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடற்படையின் சீருடை உத்தியோகத்தர்களின் விசேட முறையில் சேர்க்கப்பட்ட 4900 கடற்படையினர் மிகையும், சீருடை பதவியணியில் உத்தியோகத்தர் மற்றும் கடற்படையினரில் 7046 வெற்றிடங்களும் சிவில் உத்தியோகத்தர்களின் கீழ் மட்ட உத்தியோகத்தர்களின் 373 பேருடன், இரண்டாம் மற்றும் ஏனைய பதவிகளில் 427 வெற்றிடங்களும் நிலவியபோதிலும் அம் மிகைகளும் வெற்றிடங்களும் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மிகையான உத்தியோகத்தர்களுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | இலங்கைக் கடற்படையினால் 06 கட்டளையிடும் தளங்களில் 07 விடுமுறை விடுதிகளும் 05 விழா மண்டபங்களும் பராமரிக்கப்பட்டுவருவதுடன் இவ் விடுமுறை விடுதி மற்றும் விழா மண்டபம் 2016 சனவரி மாதம் முதல் இலாபம் ஈட்டும் நோக்கிலன்றி பேணப்பட்டுவருவதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. உரிய விடுமுறை விடுதி மற்றும் விழா மண்டப செயற்பாட்டு மற்றும் | பயன்படுத்தப்படும் கட்டிடங்களும் ஈடுபடுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் இணை உத்தியோகத்தர்கள் கடற்படைக்கு உரித்தானதுடன் அரசாங்கம் இதற்காக திரண்ட நிதியத்தில் செலவினம் ஏற்கப்படுவதனால் அரசாங்கத்திற்கு நலன் பெறப்பட்ட வேண்டும். | ஆகையால் உழைக்கும் போதான வருமானம் செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுவதனால் திரண்ட நிதியத்திற்கு பணம் செலவு வைக்கப்படுவதில்லை. மேலும், ஒவ்வொரு கடற்படைக கட்டளையிடற் தளத்திற்கு இணைக்கப்பட்ட பிரதேச |

பராமரிப்பு நடவடிக்கைகளிற்காக கடற்படை உத்தியோகத்தர்களும் இணை உத்தியோகத்தர்களும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அக் கடற்படை உத்தியோகத்தர்களினதும் இணை உத்தியோகத்தர்களினதும் சம்பளம் மற்றும் படிப்பணம் திரண்ட நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்த போதிலும், உரிய விடுமுறை விடுதி மற்றும் விழா மண்டபத்திற்கான நிதிக் கூற்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குக் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படுவதற்கோ அல்லது உள்ளகக் கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

எவ்வாறெனினும், விடுமுறை விடுதி மற்றும் விழா மண்டபத்தில் இருந்து பெறப்படும் வருமானம் அரசாங்கத்தின் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

கடற்படைக் கணக்காய்வுப் பிரிவின் மூலம், சகல விடுமுறை விடுதிகளும் விழா மண்டபங்களும் மாதாந்த மற்றும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கணக்காய்வு செய்யப்படுவதுடன் வருடாந்தம் கடற்படை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மற்றும் வெளித்தரப்புக் கணக்காளர்களால் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.